DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 290 / 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. வினோத்குமார் |
| Father Name | ராஜசேகரன் |
| Village | மாவடிபண்ணை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 35 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 02-03-2026.(நேரம்: 12.25PM )**

**(சாட்சியம் வீடியோ காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன்.

3.அசா 1 ஐ எனக்கு தெரியும், சாட்சி ராஜசேகரன் எனது அப்பா ஆவார், சாட்சி சக்திகுமார் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார்.

4.இவ்வழக்கின் எதிரி சுபாஷை எனக்கு தெரியும் எனது தெருக்காரர் ஆவார்.

5.கடந்த 24.05.2023 ஆம் தேதி இரவு 11.45 மணியளவில் எனது வீட்டில் நானும், எனது மனைவி, எனது குழந்தைகளும் தூங்கிக்கொண்டிருந்தோம்.

6.எங்களது பக்கத்து வீட்டில் அசா 1 சதீஸ் குமார் அவரது மனைவி குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

7. அன்று இரவு திடிரென்று சத்தம் கேட்டது.எழுந்து பார்த்தப்போது இவ்வழக்கின் எதிரி சுபாஷ் அசா 1 சதீஸ் குமார் வீட்டின் ஜன்னலில் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார். அசா 1 சதீஸ் குமார் கதவை திறந்துபார்த்தப்போது இவ்வழக்கின் எதிரி சுபாஷ் அங்கிருந்து ஓட முயற்சி செய்தார்.

8. நானும், அசா 1 சதீஷ்குமாரும் சேர்ந்துதான் இவ்வழக்கின் எதிரி சுபாஷை பிடித்து கீழே கொண்டுவந்தோம்.

9.எங்களை தள்ளிவிட்டு நாங்கள் போலிசாருக்கு போன் செய்வதற்குள் இவ்வழக்கின் எதிரி ஓடிவிட்டான்.

10.எங்களை பார்த்து இவ்வழக்கின் எதிரி " தேவடியா மவனே " என்று அசிங்கமாக ஏசி அருவாளை வைத்து வெட்டி விடுவேண் என்று மிரட்டி விட்டு ஓடிவிட்டார்.

11. பின்பு வாய்க்கால் செல்லும் வழியில் அசா 1ன் கார் நின்றுக்கொண்டிருந்தது.

12. அந்த காரின் முன்பக்க கண்ணாடியையும், இடது பக்க கண்ணாடியையும் எதிரி உடைத்துவிட்டார். அதன் மதிப்பு சுமார் ரூ. 25,000/– இருக்கும்.

13.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 01.06PM)**

1.எதிரி சதீஸ் குமார் எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான்.

2.சம்பவ காலத்தில் நான் எங்கிருந்தேன் என்று கேட்டால் வீட்டில் இருந்து கம்ப்யூட்டர் வேலைகள் செய்துக்கொண்டிருந்தேன்.

3.என்னை போலிசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவம் நடந்த அன்று இரவு விசாரித்தார்கள்.

4.அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

5.என்னை போலிஸ் விசாரிக்கும்போது என் அண்ணன் என் வீட்டின் எந்த பக்கத்தில் உள்ள ஜன்னலில் நின்றுபார்த்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் மேற்கு பக்கத்தில் உள்ள ஜன்னல் வழியாக பார்த்ததாக சொல்லியுள்ளேன்.

6.அந்த ஜன்னல் பூட்டப்பட்டிருந்ததா அல்லது திறந்திருந்ததா என்றால் திறந்திருந்தது.

7.சம்பவ தினத்தன்று அசா 1 வீட்டில் யாரெல்லாம் இருந்தார்கள் என்று கேட்டால் அசா 1 ம் அவரது மனைவியும், அவர்களது இரண்டு குழந்தைகளும் இருந்தார்கள்.

8.அசா 1 சதீஸ் வீட்டின் எந்த பகுதியில் அப்போதுஇருந்தார் என்று கேட்டால் வீட்டின் முதல் மாடியில் இருந்தார்.

9.மாடிபடி வீட்டிற்குள் இருந்ததா அல்லது வெளியில் இருந்ததா என்று கேட்டால் வீட்டிற்குள் இருந்தது.

10.எனவே வீட்டுக்குள் இருந்து தான் மாடிக்கு வரமுடியும் என்றால் சரிதான்.,

11.வீட்டின் கீழ்ப்புற பகுதியில் உள்ள வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

12. இந்த சம்பவத்திற்கு முன்பாக எனக்கும் எதிரிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான்.

13. சதீஸ்க்கும் எதிரியின் தகப்பனாருக்கும் , எதிரிக்கும் இடையே சம்பவத்திற்கு முன்பே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான்.

14. எதிரியின் தகப்பனார் பணம் கொடுக்கல் , வாங்கல் சம்மந்தமாக அசா 1க்கும் , எதிரிக்கும், எதிரியின் தகப்பனாருக்கும் நடுவே பணம் கொடுப்பது சம்மந்தமாக பிரச்சணை இருந்தது என்றால் அதுப்பற்றி தெரியாது.

15.நான் காவல் நிலையத்திற்கு அசா 1 டன் சென்றேனா என்றால் இல்லை.

16.மாடிக்கும், தரைதளத்தில் உள்ள தரைக்கும் நடுவே எவ்வளவு உயரம் இருக்கும் என்று கேட்டால் 20 அடிக்கு மேல் இருக்கும்.

17.நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அதனால் தான் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

18. எதிரியின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

19. அசா 1 எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20. நான் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி வீடியோ கானனொலி மூலம் சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.